முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

வா.சா.3 தேதி.21.09.2023

| OS.No. | 45/2020 | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 3ம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை திரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பில் ஆவணங்களாக 14.08.2019 தேதியிட்ட 1ம் வாதிக்கு, பிரதிவாதியிடம் இருந்து வந்த அறிவிப்பு வா சா ஆ 1. 04/12/2019 தேதியிட்ட 1ம் வாதிக்கு, பிரதிவாதியிடம் இருந்து வந்த அறிவிப்பு வா சா ஆ 2. 14.08.2019 ல் 2ம் வாதிக்கு, பிரதிவாதியிடம் இருந்து வந்த அறிவிப்பு வா சா ஆ 3. 04.12.2019 ம் 2ம் வாதிக்கு பிரதிவாதியிடம் இருந்து வந்த அறிவிப்பு வா சா ஆ 4. 14.08.2019 3, 4 வாதிகளுக்கு பிரதிவாதியிடம் இருந்தது வந்த அறிவிப்பு வா சா ஆ 5. 1ம் வாதி பணம் கட்டிய 8 வாடகை ரசீதுகள் வா சா ஆ 6. 2ம் வாதி பணம் கட்டிய 26 வாடகை ரசீதுகள் வா சா ஆ. 7. 3, 4 வாதிகள் பணம் கட்டிய 11 வாடகை ரசீதுகள் வா சா ஆ 8. 28.01.2020 ல் 1ம் வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய கோரிக்கை மற்றும் அதன் ஒப்புதல் அட்டை அலுவலக நகல் வா சா ஆ 9. 28.01.2020 ல் 2ம் வாதி நகராட்சிக்கு அனுப்பிய கடிதம் ஒப்புதல் அட்டையுடன் வா சா ஆ 10. 28.01.2020 ல் எனது தகப்பனார் நகராட்சிக்கு அனுப்பிய கடிதம் ஒப்புதல் அட்டையுடன் வா சா ஆ 11. எங்களது தகப்பனாருக்கு நகராட்சி வழங்கிய குத்தகை நீட்டிப்பு விபரம் வா சா ஆ 12. எனக்கு நகராட்சி அனுப்பிய வாடகை நிர்ணையம் செய்யப்பட்ட விபரம் வா சா ஆ 13. மேற்கொண்டு எனது தரப்பில் மேலும் ஆவணங்கள் குறியீடு தாக்கல் செய்ய காலஅவகாசம் கேட்டு ஒத்திவைக்கப்படுகிறது.